# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
## FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI

| | |
|---|---|
| **STC. No.** | **14/2025** |
| **பெயர்:** | **வெங்கடேஷ்வரன்** |
| **தந்தை பெயர் :** | **ராமதாஸ்** |
| **வயது:** | **47/2026** |
| **ஊர்:** | **துவரங்குறிச்சி** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **தொழில் மேலாளர்/பவர் ஏஜென்ட்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **08th day of June 2026**
**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 3:28 PM**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான செல்வி. மதுஆர்த்தி(Steno-Typist) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது).**

1. எதிரியானவர் எத்தனையாவது சந்தாதாரர் என்றால், 5வது சந்தாதாரர் ஆவார். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.6-ல் சாட்சிதாரர்களின் கையொப்பம் யாருடையது என்றால், அவர்கள் சென்னையைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

2. இவ்வழக்கு காசோலையை எதிரியானவர் எப்போது கொடுத்தார் என்றால், 2012 ஆம் வருடம் ஆகும்( சாட்சியானவர் தற்போது 2024 ஆம் ஆண்டு காசோலை கொடுத்ததாக கூறினார்).

3. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பம் எதிரியுடையதா என்றால், எதிரியுடையது தான். அதில் உள்ள விபரங்கள் யார் பூர்த்தி செய்தார் என்றால், எங்கள் நிறுவனத்தின் ஊழியர்கள் பூர்த்தி

செய்தார்கள். எதிரியானவர் கையொப்பம் மட்டும் இட்ட வெற்று காசோலையைதான் கொடுத்தாரா என்றால், இல்லை.

4. காசோலையை வங்கியில் செலுத்தினால் புகார்தாரர் கூறும் நபர்க்குதான் பணத்தை கொடுக்கவேண்டும் என்று ஏதேனும் கடிதம் என்னிடம் கொடுத்தாரா என்றால், இல்லை.

5. இவ்வழக்கின் காசோலை எண் என்னவென்றால், 011306 ஆகும். எங்கள் நிறுவனம் எதிரிக்கு கொடுத்த காசோலையின் எண் என்னவென்றால், 002793 ஆகும்.

6. எதிரியானவர் எங்கள் நிறுவணத்தில் எவ்வளவு பாக்கி தொகை நிலுவையில் வைத்துள்ளார் என்றால், ரூ.43,500/- ஆகும். அந்த தொகையானது 09.12.2013 ஆம் தேதியில் ஏற்பட்ட நிலுவை ஆகும். இந்த விபரத்தினை என்னுடைய நிரூபனவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். எனது நிறுவனம் எதிரிக்கு கொடுத்த காசோலையை எதிரி வங்கியில் செலுத்திய பின் எந்த தேதியில் எங்கள் நிறுவனக் கணக்கில் இருந்து Debit ஆனது என்றால், 15.09.2012 ஆகும். இந்த விபரத்தினை என்னுடைய நிரூபனவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன்.

7. எங்கள் நிறுவனம் எதிரிக்கு கொடுத்த காசோலையில் என்ன தொகை பூர்த்தி செய்திருக்கிறது என்றால், ரூ.74,567/- ஆகும்.

8. எதிரி எங்கள் நிறுவணத்தில் சீட்டு பணம் எடுக்கும்போது என்னென்ன ஆவணங்கள் கொடுத்தார் என்றால், இரண்டு தொழில் செய்யும் நபர்களிடம் இருந்து அவர்களுடைய ஆதார், தொழிலின் GST விபர ஆவணங்கள் ஆகியவை பெற்றுள்ளோம்.

9. எதிரிக்கு கொடுத்த பணத்திற்கு வட்டிவீதம் என்னவென்றால், 1.5 % ஆகும். எதிரியானவர் எங்கள் நிறுவணத்திற்கு பணத்தை தரவேண்டும் என்பதை எப்படி கேட்டோம் என்றால், தொலைபேசி மூலமும், நேரில் வீட்டிற்கு சென்றும், நோட்டீஸ் அனுப்பியும் கேட்டோம். எதிரியானவர் பணத்தை முறையாக கொடுக்கவில்லை என்பதால் அவருக்கு Surety ஆக இருந்த இரண்டு நபர்களுக்கு வழக்கறிஞர் அறிப்பு அனுப்பினோமா என்றால், அனுப்பினோம்.

10. எனது நிருபனவாக்குமூலத்தில் Account Closed மற்றும் போதிய பணம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால், சரிதான். இரண்டும் ஒன்றா என்றால், இல்லை. காசோலை வசூலுக்கு தாக்கல் செய்து அது திருப்பப்பட்ட விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால், 20.06.2024 ஆகும்.

11. எதிரி கொடுத்த காசோலை நான் வங்கியில் தாக்கல் செய்யும்போது அந்த காசோலையானது காலாவதியான காசோலை என்று வங்கி ஊழியர்கள் என்னிடம் கூறினார்கள என்றால், இல்லை.

12. நான் எனது நிறுவணத்திற்காக சமூக நீதிமன்றத்தில் STC 18/2025, STC 37/2025, STC 38/2025, STC 141/2025, STC 142/2025, STC 148/2025 ஆகிய வழக்குகளை நடத்திவருகிறேன் என்று சொன்னால், சரிதான்.

13. எதிரியானவர் எங்கள் நிறுவணத்திற்கு கொடுக்கவேண்டிய தொகை அனைத்தையும் கொடுத்து தீர்ந்துவிட்டது என்றும், வழக்கு காசோலையில் குறிப்பிட்ட தொகையை சட்ட ரீதியாக தர எனக்கோ எனது நிறுவணத்திற்கோ கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால், சரியல்ல. காலாவதியான காசோலையை வைத்து இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் , சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம் 04:10 PM**

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி முடிக்கப்பட்டது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.